மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.303/2017</u>

2025ம் ஆண்டு நவம்பர் 26ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வரதராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>26.11.2025 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் எந்த வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டேன் என்பது எனக்கு தெரியுமா என்றால் வயது தெரியவில்லை. யார் என்னை பள்ளியில் சேர்த்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் என் அப்பா சேர்த்தார். ஆரம்பத்தில் என்னை எந்த பள்ளியில் சேர்த்தார்கள் என்றால் வெள்ளக்கோவில் நடுநிலை பள்ளியில் சேர்த்தார்கள். எனது பிறப்பு சான்றிதழ் என் கைவசம் இல்லை என்றால் ஆமாம். என்னை பள்ளியில் சேர்த்த போது எனது பிறப்பு சான்றிதழ் பள்ளியில் கொடுக்கப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

2. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் யார் சொல்லி யாரால் பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் அப்பா தான்

அதற்கு விவரங்கள் சொன்னார். பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் கண்டுள்ள விவரங்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் என்ற இடத்தில் யாருடைய கையொப்பமும் இருப்பதாக அந்த ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் பழனிச்சாமி என்பவரின் தகப்பனார் பெயரோ அவரது விலாசமோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் பள்ளி மாற்றுச் சான்றிதழ் நான் கொடுத்துள்ளபடி தான் கொடுப்பார்கள்.

3. பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் பழனிச்சாமி என்பவரின் மனைவி பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17 ஆவணத்தை தவிர எனது பிறந்த தேதி மற்றும் எனது பெற்றோர் விபரங்களை குறித்து காட்டக்கூடிய வேறு ஆவணங்கள் எதுவும் என் வசம் இல்லை என்றால் ஆமாம். வெள்ளகோவில் அரசு மேல்நிலைப்பள்ளி என்பது சுமார் 5000 மேற்பட்ட மாணவர்கள் படித்து வரக்கூடிய பள்ளி என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.17 ஆவணமானது எனக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் கண்டிருக்கக் கூடிய விவரங்கள் பொய்யானவை என்றும், நான் வழக்கிற்கு ஏற்றார் போல் மேற்படி ஆவணத்தை பெற்று வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4. பி.வா.சா.ஆ.17 ஆவண காலகட்டத்தில் அதில் கண்டுள்ள விபரங்கள் சரிபார்த்து உறுதி செய்யப்பட்டு பதிவு செய்யப்படவில்லை என்று

சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.17 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

(5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது)

வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.26 19:08:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்